5th March 1958]

Sri N. K. PALANISAMI: 1956-ம் வருஷத்திலேயே மோட்டார் இறக்குமதியை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கி மறுபடியும் அதிகப்படியாக மோட்டார் இறக்குமதி செய்வதற்கு சர்க்கார் புனராலோசனை செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இப்பொழுது முக்கியமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஸ்விட்ச் கியருக்கும், ஸ்டார்ட்டருக்கும் இருக்கிறது. மோட்டார்கள் இப்பொழுது கிடைக்கிறது. மோட்டார்கள் போதவில்லையென்றால், அதைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தலாம்.

Electric motors

* 199 *Q.*—Sri S. M. ANNAMALAI: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Central Government have been requested by the State Government to sanction import and sale of electric motors, starters, switches, etc., for the water pumpsets required by the agriculturists?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: In February 1957 this Government addressed the Government of India for the allotment of 7,400 electric motors (with starters and switches) for the half-year January to June 1957 as a special case to meet the requirements of agriculturists in this State as a result of representations received regarding dearth of electric motors, etc.

Sri S. M. ANNAMALAI: வியாபாரிகள் பழைய மோட்டார்களுக்குப் புது 'பெயிண்ட்' அடித்து புது மோட்டார் என்று சொல்லி விற்பதாலும், காலையில் இருந்த விலை மாலையில் உயர்ந்து விடுவதாலும், அப்படி வியாபாரிகள் தப்பிதமாக விற்பதால் நம்முடைய நாட்டு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், மோட்டார், ஸ்விட்ச், ஸ்டார்ட்டர் போன்ற மின்சார சாமான்களைச் சர்க்காரே வாங்கி கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ, விவசாய டிபார்ட்மெண்ட் மூலமாகவோ விவசாயிகளுக்குக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இம்மாதிரி குறிப்பாக புகார்கள் எதும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆனால் அரசாங்கமே வாங்கி விநியோகிக்கும் விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

Educational concessions

* 200 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state why the President of Tamil Nad Congress Committee has been authorized to issue certificates to children of political sufferers regarding the educational concessions?

The Hon. Sri C. SUBRAMANIAM: As per the orders sanctioning the concession to children of political sufferers, political sufferers are defined " as those who have undergone imprisonment in the cause of Indian Independence as a result of taking part in the movements inaugurated since the beginning of the year 1921 by the Indian National Congress or under its sanction ". The President, Tamil Nad Congress Committee, is considered to be the most competent person to issue the certificates.